

ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க.இளைஞரணி அமைப்பாளர் கோ.பிரவீன்குமார் சகோதரர் கோ.சதீஷ்குமார் திருவுருவப் படத்தை – அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மா.சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். உடன் பகுதிச் செயலாளர்கள் ப.குணாளன், என்.சந்திரன் எம்.சி., ஜெயக்குமார், கோல்டு பிரகாஷ், முரளி கிருஷ்ணன், கலாநிதி, ராஜவேல், தீபக், வாசிம் திலீப், கவிக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

### ரூ.1.15 கோடி செலவில் கோடம்பாக்கம், பாரத்வாஜேசுவரர் கோயிலுக்கு

# வெள்ளித் தகடு போர்த்தப்பட்ட புதிய அதிகார நந்தி வாகனம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

சென்னை, ஏப். 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்றுறு (23.04.2025) சென்னை, கோடம்பாக்கம், புலியூர், பாரத்வாஜேசுவரர் திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதியில் ரூ.1.15 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ள வெள்ளித் தகடு போர்த்தப்பட்ட புதிய அதிகார நந்தியினை திருக்கோயில் பயன்பாட்டிற்கு வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்துதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில் 2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், "சென்னை மாவட்டம், புலியூர், பாரத்வாஜேசுவரர் திருக்கோயிலுக்கு வெள்ளித்தகடு போர்த்திய புதிய அதிகார நந்தி வாகனம் செய்யப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அ றி வி ப் பி னை நிறைவேற்றிடும் வகையில் புலியூர், பாரத்வாஜேசுவரர் திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதியில் ரூ.1.15 கோடி செலவில் 90 கிலோ 979 கிராம் எடை கொண்ட வெள்ளியை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள வெள்ளித் தகடு போர்த்தப்பட்ட புதய அதிகார நந்தியினை நேற்று (23.04.2025) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திருக்கோயில் நிர்வாகத்திடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர்கள் திருமதி கோ.செ.மங்கையர் கரசி, திருமதி இரா.வான்மதி, திருமதி ஐ.முல்லை, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், துணை ஆணையர்கள் இரா.ஹரிஹரன், திருமதி ஜெயா, மாநகராட்சி உறுப்பினர் திருமதி எளிசபெத் அகஸ்டியன், உபயதாரர் ஈ.டி.சுந்தரமூர்த்தி குடும்பத்தினர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசுப் பள்ளி மாணவர்களுக்கு – மருத்துவப் படிப்பில் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்பாக அ.தி.மு.க. அரசு பிறப்பித்த அவசர அரசாணை!

# சாயம் வெளுத்துவிடுமே எனும் அச்சத்தில் - அ.தி.மு.க. அரசு பிறப்பித்த அரசாணை!

## சட்டப் பேரவை கவன ஈர்ப்பில் – ஆதாரங்களுடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

**சென்னை, ஏப். 24 -**

**சட்டப்பேரவையில் நேற்று, அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம், மருத்துவ இளநிலைப் படிப்பில் இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக நடைபெற்ற விவாதத் திற்குப் பதிலளித்துப் பேசிய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "இது தொடர்பாக அ.தி.மு.க. அரசில் அவசர கதியில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை என்பது, தங்களது உண்மைச் சொரூபம் வெளிப்பட்டு சாயம் வெளுத்து விடுமே என்ற அச்சத்தில், அ.தி.மு.க. அரசினரால் பிறப்பிக்கப் பட்டதாகும்" என்று, அது தொடர்பான வரலாற்றை புள்ளி விவர ஆதாரங்களு டன் எடுத்துரைத்து தோலுரித்தார்.**

சட்டப்பேரவையில், இது தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானம் மீதான விவாதத்திற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலுரை வருமாறு:-

2020 ஆம் ஆண்டு அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 7% சிறப்பு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு, ஒரு சட்ட முன்வடிவு 15-9-2020 அன்று சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கு முன்னால் நம்முடைய தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு NEET தேர்வு நடைமுறைக்கு வந்துவிட்ட காரணத்தினால், கிராமப்புறங்களில் இருக்கிற அரசு மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்கிற அந்தக் கோரிக்கையை முதலில் வலியுறுத்தினார். வலியுறுத்தியதோடு மட்டுமல்லாது அதற்கான சிறப்பு ஒதுக்கீடும் வேண்டுமென்கிற கோரிக்கை வைத்து, "அந்தக் கோரிக்கை இந்தச் சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவாக வரும்பட்சத்தில் தி.மு.க. அதற்கு உறுதுணையாக இருக்கும்" என்கின்ற வகையிலான செய்தியினைத் தெரிவித்தார்கள்.

அந்த வகையில் கடந்த அரசு 15-9-2020 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஒட்டுமொத்தமாக அன்றைக்கு அவையிலிருந்த அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்கான ஒப்புதலைத் தந்து, நிறைவேற்றித் தந்தார்கள். இந்த நிலையில் ஆளுநர் மாளிகை ஒப்புதல் அளிக்க பெரிய அளவிலான தாமதம் செய்துகொண்டிருந்தது.

எனவே, தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் , அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் 19-10-2020 அன்று ஆளுநருக்கு, உடனடியாக ஒப்புதல் அளிக்காவிட்டால் தி.மு.கழகத்தின் சார்பில் ஒரு பெரிய போராட்டத்தை நடத்துவோம் என்று சொல்லி, ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அறிக்கை வெளியிட்டதோடு மட்டுமல்லாது,

22-10-2020 அன்று 'உடனே ஒப்புதல் தருக' என்று ஆளுநருக்கு ஒரு கடிதத்தையும் எழுதினார். அறிக்கை வெளியிட்டு, கடிதத்தை எழுதி அதற்கு பிறகும்கூட, அந்த தாமதம் நீடித்துக் கொண்டே இருந்த நிலையில், மீண்டும் தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் ஆளுநர் இந்த தாமதத்தை கலைந்து இதற்கு ஒப்புதல் அளிக்காவிட்டால், தி.மு. கழகத்தின் சார்பில் எனது தலைமையிலேயே மிகப்பெரிய போராட்டம் ஆளுநர் மாளிகையின் முன் நடைபெறும் என்று அறிவித்தார்கள். அறிவித்ததற்கேற்ப, 2020, அக்டோபர் திங்கள் 24 ஆம் தேதி ராஜ்பவனிற்கு எதிரிலே வேளச்சேரி சாலையில் இன்றைய முதல்வர் அவர்களின் தலைமையில் ஒரு மிகப்பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் ஆளுநருக்கு எதிராக நடத்தப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டத்தின் உட்கரு 7%க்கு சட்டமன்றத்தில்



நிறை வேற்றிய அனுப்பியிருக்கிற அந்த சட்டமசோதாவை உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று அந்தப்போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டம் நடத்தப்பட்ட 5 நாட்களுக்குப் பிறகு, 29102020 அன்று அரசாணை எண் 438ன்படி, அரசுப் பள்ளிகளில்பயின்றமாணவ, மாணவிகளுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை அளித்து, ஆணை வெளியிடப்பட்டது. அன்றிலிருந்து தொடர்ந்து

இந்த அரசாணையின் மூலம் மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். 20202021 ஆம் ஆண்டில் 435 மாணவர்களும், 2021-2022 ஆம் ஆண்டில் 555 மாணவர்களும், 2022- 2023 ஆம் ஆண்டில் 584 மாணவர்களும், 2023-2024 ஆம் ஆண்டில் 625 மாணவர்களும், 2024-2025 ஆம் ஆண்டில் 625 மாணவர்களும் பயன் பெற்றிருக்கிறார்கள்.

**வழக்கு!**

சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் சொன்னதைப்போல, சுய நிதிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டுமென்கிற அளவில், அன்றைக்கு தேர்ச்சி பெற்ற மாணவர்க ளுக்கு கட்டணச் சலுகை வேண்டுமென்கிற கோரிக்கையோடு மாணவர்களை அவர் அழைத்து வந்து, இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களிடத்தில் காட்டிய போது, அவர்தான், அவரே சொன்னதைப்போல சட்ட வல்லுநர் பெருமதிப்பிற்குரிய பி. வில்சன் அவர்களிடத்தில் அனுப்பி, வழக்குத் தொடுத்து, அதில் அவர் வெற்றியும் கண்டார்.

உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி இங்கே சொன்னதைப்போல, தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் இந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டில் வெற்றி பெற்ற மாணவர்கள், அதாவது first batch. அந்த முதல் batchல் வெற்றி பெற்ற 435 பேருக்கு தி.மு. கழகத்தின் சார்பில், அவர்களுக்கான கட்டணங்களை தி.மு.க. செலுத்தும் என்கிற அறிவிப்பை காலை 1100 மணிக்கு அறிவித்தார். காலை 1100 மணிக்கு அவருடைய அறிவிப்பு எல்லா தொலைக்காட்சிகளிலும் செய்தியாக வந்தது. பிற்பகல் 300 மணிக்குமேல் அன்றைய முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவரகள் (அன்றைய முதல்வர்) ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள். அதாவது, இந்த 435 பேருக்கும் அரசாங்கமே கட்டணச் சலுகையைத் தரும் என்கிற அறிவிப்பை எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்தார்கள். ஆக, "இந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு மூலக்கரு, அது வர வேண்டுமென்கிற அளவில் போராட்டம் நடத்தி, மிகப் பெரிய அளவிலான வெற்றியைக் கண்டவர் நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதை அனைவருமே நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிலையில், இதில் ஏதாவது, நான் சொன்ன எந்த தேதிகளிலாவது அல்லது நாங்கள் போராட்டம் நடத்திய எந்தத விஷயத்திலாவது அல்லது அரசாணை வெளியிடப் பட்ட அந்தத் தேதியிலாவது அல்லது தி.மு. கழகம் கட்டணச் சலுகை செலுத்தும்" என்கிற அந்த அறிவிப்பு எல்லா செய்தித்தாள்களிலும், எல்லா ஊடகங்களிலும் இன்னமும் ஆவணங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. தேவைப்படுபவர் சென்று பார்த்துக் கொள்ளலாமே தவிர, இதை. (குறுக்கீடு)

**போராட்டம்!**

2020ல், கடந்த ஆட்சிக் காலத்தில் வந்தது என்பதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால், ஆளுநர் தாமதித்தபோது, அதைக் கொண்டு வருவதற்குரிய எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தது என்பதையும் நீங்கள் ஒப்புக் கொண்டுதான் தீர வேண்டும். அந்த நிலையில்தான் இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவரே, அவர் தலைமையில் வேளச்சேரி சாலையில், ராஜ் பவனுக்கு எதிரே மிகப் பெரிய அளவிலான போராட்டம் நடத்தியதை யாராலும் மறுக்கவே முடியாது.

ஆளுநருக்கு எதிரான போராட்டம், ஆளுநருக்கு எதிரான அறிக்கை, ஆளுநருக்கு கடிதம் என இப்படி எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டதற்குப் பிறகும்கூட ஆளுநர் செய்யாதிருந்த நிலையில், நீங்கள் ஒரு சட்டத்தின்மூலம் இதை நிறைவேற்றினீர்கள் என்பதை நான் சொன்னேனே! அதை ஒன்றும் நான் சொல்லவில்லை. அதை நான் மறைக்க வில்லை. அரசாணை எண் 438ன்கீழ், அதை நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்பதை நான் மறைக்கவில்லை. ஆனால், இதற்கான மூலக்கரு தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதை யாராலும் இன்றைக்கு மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அதுமட்டுமல்ல, முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு வெறும் மருத்துவத்திலிருந்த 7.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது இன்றைக்கு வேளாண்மையில் வந்திருக்கிறது, பொறியியலில் வந்திருக்கிறது, சட்டத்தில் வந்திருக்கிறது. இன்னமும் பல்வேறு பாடப் பிரிவுகளில், அரசுப் பள்ளிகளில் படித்த மாணவ, மாணவிகள் 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டில் பயன்பெறுகிற வகையிலான திட்டங்களைத் தொடர்ந்து தீட்டிக் கொண்டிருப்பவர் மனிதநேயம் உள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதை அனைவருமே நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் விஜயபாஸ்கர் பேசும்போது, internship பற்றிச் சொன்னார். அதாவது, உள்ளிருப்பு பயிற்சிக் கட்டணம் ஒருசில கல்லூரிகளில் கேட்கப்படுகின்றன என்கிற அந்த விஷயத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அரசின் சார்பில், அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு எந்தளவுக்கு இன்றைக்கு இந்த அரசின் சார்பில் கட்டணம் செலுத்தப்படுகிறது என்றால், tuition fee, special fee, examination fee, hostel fee, mess fee, books, basic materials like white coat, stethos cope, University registration fee, insurance, miscellaneous என்று சொல்லி, 1 இலட்சத்து 49 ஆயிரத்து 741 ரூபாய் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு கல்விக் கட்டணமாக அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படுகிறது.

**ஊக்கத் தொகை!**

சுயநிதி மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரை tuition fee, admission fee, special fee, examin ation fee, hostel fee, books, basic materials என்று 9,07,000/ ரூபாய் அரசின் சார்பில் தனியார் கல்லூரிகளுக்கும் தரப்படுகிறது. இந்த வகையில் தொடர்ந்து அரசின்மூலம் வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது. படிப்பு முடிந்த பின் ஓராண்டு உள்ளிருப்புப் பயிற்சி பெற்ற பின் அவர்களுக்கு இளங்கலைப் பட்டங்கள் வழங்கப்படுகிறது. தேசிய மருத்துவ ஆணையத்தின் கட்டாய சுழற்சி மருத்துவ பயிற்சிக்கான விதிமுறைகள் 2021 ன்படி அனைத்து மருத்துவர்களும் ஓராண்டு உள்ளிருப்புப் பயிற்சிக் காலத்தில் ஊக்கத்தொகை, பயிற்சி பெறும் கல்லூரிகளின் மூலமாக வழங்கப்படுகிறது. எந்தக் கல்லூரியில் உள்ளிருப்புப் பயிற்சி பெறுகிறார்களோ அந்தக் கல்லூரிகளின் வாயிலாக, இந்த ஊக்கத்தொகை என்பது தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசு மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அந்த உதவித்தொகை என்பது ரூ.28,138/என வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் விஜயபாஸ்கர் அவர்களாக இருந்தாலும், பாலாஜி அவர்களாக இருந்தாலும் ஒருசில சுயநிதிக் கல்லூரிகளில் உள்ளிருப்பு பயிற்சிக்கு கட்டணம் கேட்கிறார்கள் என்கின்ற குறையைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். Fee Fixation Committee என்று குழு இருக்கிறது, கட்டண நிர்ணயக்குழு. அந்தக் குழுவிற்கு எதாவது தனிப்பட்ட வகையில் புகார்கள் வருமேயானால் நிச்சயம் அந்தக் கல்லூரியின்மேல் நடவடிக்கை எடுப்பதில் தடையில்லை. இப்படியும்கூட, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பாலாஜி சொன்னார்கள். பெரிய அளவில் சிரமப்பட்டு அந்த இடத்திற்கு போகிறார்கள். அந்தக் கல்லூரி செய்கிற தவறுகளை எப்படி சுட்டிக்காட்டுவார்கள், தனிப் புகார் எப்படி வரும் என்று கேட்டிருக்கிறார். தனியாக சொன்னால்தான் தெரியும். இவ்வளவு மாணவர்கள் படிக்கிற இடத்தில் யார் பாதிப்பிற்குள்ளாகிறார்கள் என்ற செய்தி தெரிவிக்கப்பட்டால் நிச்சயம் இந்த Fee Fixation Committee நடவடிக்கை எடுக்கும்.

இப்போது நம்முடைய உறுப்பினர் விஜயபாஸ்கர் தன்னிடத்தில் ஒரு புகார் வந்து, அது தன்னிடத்தில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அவர் அந்த புகாரின் தகவலை, தங்களிடத்தில் (பேரவைத் தலைவரிடம்) தருவாரேயானால், அதை நான் பெற்று நிச்சயம் இந்த Fee Fixation Committee யிடம் தந்து உடனடியாக அந்தக் கல்லூரியின்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிடுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தக் கல்லூரியாக இருந்தாலும், சுயநிதிக் கல்லூரியைப் பொறுத்தவரை, உள்ளிருப்புப் பயிற்சியைப் பொறுத்தவரை, இதற்கான கட்டணத்தை தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். அரசாங்க கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசாங்கம் உள்ளிருப்பு பயிற்சிக்கான உதவித் தொகையை தருகிறது. அவர்களும் இதற்கான கட்டணத்தை மாணவர்களிடத்தில் கேட்கக்கூடாது. சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் சொன்னதுபோல கூடுதல் கட்டணம் கேட்கிறார்கள் என்கின்ற அந்த விவரங்களையும் சொல்லியிருக்கிறார். அப்படி கூடுதல் கட்டணம் கேட்கிற, எந்தக் கல்லூரியில் யாரிடத்தில் கேட்டார்கள் என்ற தகவலை புகாராகத் தந்தால் நிச்சயம் இந்த Fee Fixation Committeeயின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் . (குறுக்கீடு)

நீட் தேர்வினால் பாதிக்கப்பட்டு, இலட்சக்கணக்கான குடும்பங்கள், ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டு, ஒரு மிகப்பெரிய அளவில் மனக்கொதிப்போடு இருக்கிற நிலையில் தந்த 7.5 சதவிகிதத்தைக்கூட அழுத்தம் இவர்கள்மூலம் தரப்படாத நிலையில்தான், தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் அறிக்கையை வெளியிட்டார், கடிதத்தை கவர்னரிடத்தில் தந்தார். அதுமட்டுமல்ல போராட்டத்திற்கு தானே தலைமையேற்று அந்தப் போராட்டத்தை நடத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு அப்புறம்தான் நான் இல்லை. தேதிகளையெல்லாம் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) 24—10-2020 அன்றைக்கு தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சர் தலைமையில். மிக பிரமாண்டமான போராட்டாம் ஆளுநருக்கு எதிராக நடத்தப்பட்டது. அந்தப் போராட்டத்தை நடத்தியவர் இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் .

**ஆவணங்கள்!**

அவர் தலைமையில் நடத்தப்பட்ட போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று ஆளுநருக்கு எதிரான கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள். இந்த நிலையில்தான்

24-10-2020ல் போராட்டம், இந்த நிலையில் ஐந்து நாட்கள் கழித்து 2910 2020, இவ்வளவு பெரிய போராட்டத்திற்கு பிறகும் இந்த அரசாணையை நாம் நிறைவேற்றா விட்டால், இந்த 7.5% இட ஒதுக்கீட்டை நாம் பின்பற்றாவிட்டால், (குறுக்கீடுகள்) மக்களிடத்தில் நம்முடைய சாயம் வெளுத்துவிடும் என்பதற்காக நீங்கள் ஓர் ஆணை போட்டு, (குறுக்கீடுகள்) அந்த 7.5% இடஒதுக்கீட்டை கொண்டு வந்தீர்கள் என்பதை நாடு என்றைக்கும் மறக்காது. (குறுக்கீடுகள்)

**ஆர்.பி. உதயகுமார்:** Hon'ble Chief Minister's announcement in Tamil Nadu Legislative Assembly dated

21-3-2020 என்பதை base ஆகக் கொண்டு, மசோதா தாக்கல் செய்யப்பட்டு வந்த பிறகு, dated 29-10-2020 G.O. No.438ல் Medical Education provision of

7.5%. . . (குறுக்கீடு)

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** இதையேதான் நான் இரண்டு முறை சொன்னேன். (குறுக்கீடு)

G.O. No. 438 என்றும் சொன்னேன். மற்றொன்று Times of India. . . (குறுக்கீடுகள்) Times of Indiaல் நம்முடைய முதல்வர் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தைப்பற்றி பெரிய அளவிலான செய்தி வந்திருக்கிறது. 'DMK protest sees large crowd; more will follow, says M.K. Stalin' அனைத்து பத்திரிகைகளிலும் வந்த செய்தி இருக்கிறது. இதை யாரும் மறைத்துவிட முடியாது. ஆவணங்கள் இருக்கின்றன.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.




பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு–169க்குட்பட்ட சைதாப்பேட்டை, வெங்கடாபுரத்தில் ஏரியா சபைக் கூட்டம் துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில் நேற்று (23.04.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மண்டல அலுவலர் (பொ) ஹாரிதன், ஏரியா சபை உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, மின்துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பிற சேவைத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் மாணவர் அணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா . அருண்குமார் தலைமையில் வேளச்சேரி மேற்கு பகுதி மாணவர் அணிஅமைப்பாளர் டி.எஸ். சூரிய பிரகாஷ் ஏற்பாட்டில் வேளச்சேரி விஜயநகர் பேருந்து நிலையம் அருகில் நீட் தேர்வை கொண்டு வந்த பாசிச பாஜகவுக்கு எதிராகவும் அவர்களுடன் கூட்டணி வைத்து நாடகம் ஆடும் அதிமுகவின் இரட்டை வேடத்தை பொதுமக்களுக்கு வெளிச்சம் காட்டும் விதமாக வேளச்சேரியில் பொதுமக்களை சந்தித்து துண்டு பிரசுரத்தை பகுதி செயலாளர் சு. சேகர் தொடங்கி வைத்து வழங்கினார். இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஈஸ்வரமூர்த்தி, சீனிவாசன், விஷ்ணு, யமுனா ஸ்ரீ, பகுதி அமைப்பாளர் கலைவாணன், ரமணா, சுமிர்ராஜ். ஒன்றிய அமைப்பாளர் கிஷோர், பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் பல்வேறு கல்லூரியின் மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. துணைவியார் பிறந்த நாள் தினத்தை முன்னிட்டு சகாயமாதா முதியோர் இல்லத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு தலைமையில், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கா. செல்வம் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி. வினோத் குமார் ஆகியோர் ஏற்பாட்டின் படி மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஆர்.பி. பரமேஷ்குமார், எம்.இராமசாமி, இரா.அன்வர்கான், ஜெ.காளிதாசன், சுசிலா, நகர கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.